# இரண்டாம் பருவத் தேர்வு -2023

பதிவெண் 7A0002

## VII - தமிழ்

நேரம் : 2.30 மணி    மதிப்பெண்கள் : 60

### தொகுத்தறி மதிப்பீடு

**I) i) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன ________.

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மாடங்கள்

2. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ________.

அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு

3. பின்வருவனவற்றுள் மலையைக் குறிக்கும் சொல் ________.

அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி

4. அன்னை தான் பெற்ற ________ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறார்.

அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) மழலையின் ஈ) கணவனின்

5. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் ________.

அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம் இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்

**ii) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **2 x 1 = 2**

6. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ________.

7. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ________.

**iii) பிரித்து எழுதுக.** **2 x 1 = 2**

8. பெருங்கடல்

9. ஏடெடுத்தேன்

**iv) சேர்த்து எழுதுக.** **2 x 1 = 2**

10. வார்ப்பு + எனில்

11. கட்டி + அடித்தல்

**v) பொருத்துக.** 4 x 1 = 4

12. பெயர்ப் பகுபதம் - வாழ்ந்தான்

13. வினைப் பகுபதம் - மன்

14. இடைப் பகாப்பதம் - நனி

15. உரிப் பகாப்பதம் - பெரியார்

**II. கீழ்க்கண்ட வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3 x 2 = 6**

16. கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

17. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?

18. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?

19. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

20. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?



www.Padasalai.Net

Scanned with AnyScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**III. கீழ்க்கண்ட குறுவினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3 x 2 = 6**

21. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
22. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
23. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
24. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.
25. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **5 + 2 = 7**

26. '*வானம் ஊன்றிய்*' ........ எனத் தொடங்கும் கலங்கரை விளக்கம் பாடலை எழுதுக.

*(அல்லது)*

'*வைப்புழிக் கோட்படா*' ...... எனத் தொடங்கும் அழியாச் செல்வம் பாடலை எழுதுக.

27. 'எண்ணித்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**V. கீழ்கண்ட குறுவினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3 x 2 = 6**

28. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
29. ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன?
30. பதத்தின் இரு வகைகள் யாவை?
31. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?
32. வளர்தல், பேசுதல் - இவை எவ்வகைப் பெயர்கள்?

**VI. விடையளி.** **2 x 4 = 8**

33. 'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

*(அல்லது)*

கீரைப் பாத்தியும், குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

34. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்க, தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.

*(அல்லது)*

கேலிச்சித்திரம் என்றால் என்ன?

**VII. கட்டுரையை எழுதுக.** **2 x 4 = 8**

35. 'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.

*(அல்லது)*

மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

*(அல்லது)*

உங்கள் மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களைப் பற்றி எழுதுக.

36. 'பயணங்கள் பலவகை' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*(அல்லது)*

உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**VIII. கலைச்சொல் எழுதுக.** **2 x 1 = 2**

37 அ) Moral ஆ) Cartoon

**IX. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.** **2 x 1 = 2**

38. ____ மணம் வீசும்.
39. ____ சுடும்.



www.Padasalai.Net

Scanned with AnyScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com